
## உரத்துப் பேசிய ஏ.ஜி.நூரானி!




இடதுசாரிச் சிந்தனையாளரான ஏ.ஜி.நூரானி, வழக்கறிஞர், பத்திரிகையாளர், எழுத்தாளர் எனப் பன்முக அடையாளம் கொண்டவர். அரசியல் பிரச்சினைகளை மிக மிக நுணுக்கமாக விமர்சித்து, அநீதிகளை அம்பலப்படுத்துவதில் ஈடு இணையற்றவராக இருந்த ஏ.ஜி.நூரானி, கடந்த மாதம் 29-ஆம் தேதி, தனது 93-வது வயதில் மறைந்தார்.

ஆர்.எஸ்.எஸ். குறித்த நூல்களையும், நீதிமன்றத் தீர்ப்புகளையும், விசாரணை ஆணைய அறிக்கைகளையும் ஆய்வு செய்தவர் நூரானி. இவரது கட்டுரைகள், நூல்கள் அனைத்தும் வலுவான வரலாற்றுக் குறிப்புகளை ஆதாரமாகக் கொண்டவை.

“ஆர்.எஸ்.எஸ். இந்தியாவின் அச்சுறுத்தல்”, காஷ்மீர் பற்றிய “தி காஷ்மீர் கேள்வி” உட்பட இவரது பல புத்தகங்கள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. இந்திய முஸ்லிம்கள் தொடர்பான பிரச்சினைகளை விரிவாக எழுதியவர் நூரானி.

அவரது நினைவைப் போற்றும் வகையில், சொற்பொழிவு நிகழ்ச்சி, சென்னையில் அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகத்தில், சனிக்கிழமை (14.09.2024) அன்று நடைபெற உள்ளது.

நூரானி அவர்களுடன், நீண்ட காலம் பயணித்த மூத்த பத்திரிகையாளர் ஆர்.விஜயசங்கர், “அரசியல் சாசனத்தைப் பாதுகாக்க முன் நின்றவர் ஏ.ஜி.நூரானி” எனக் கருத்துரை அளிக்க உள்ளார்.

“தனது 92 வயதிலும், அதிகாரத்தை எதிர்த்து, உண்மை பேசும் உறுதி தளராமல் நின்றவர், நீதிபதிகளைத் தேர்வு செய்யும் கொலீஜியம் அமைப்பைப் போலியானது எனச் சாடி, கட்டுரை எழுதியவர்” ஏ.ஜி.நூரானி. குறிப்பாக, வலதுசாரிகள் அஞ்சும் அரசியல் விமர்சகராக இருந்தவர். அவரது நினைவுகள் வற்றாமல் காப்பதே, அரசியல் அமைப்பைக் காக்கும் வழி.

## :ப்ளாஷ்பேக்





டி.நாகலிங்கம்

### தலைவருக்குப் பிறந்த நாள் வாழ்த்து!

1991-ஆம் ஆண்டு, அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் தளபதி அவர்களின் 39-வது பிறந்தநாளை முன்னிட்டு, கோபாலபுரம் இல்லத்திற்கு வாழ்த்துத் தெரிவிக்கச் சென்றிருந்தேன். அதிகாலையிலேயே அவரைச் சந்தித்து சால்வை அணிவித்து, என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டேன். அப்போது எடுக்கப்பட்ட படம் இது.

**– டி.நாகலிங்கம், திருவான்மியூர், சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### துணைக் குழுவில் கலைஞர்!

1949-ஆம் ஆண்டு தி.மு.கழகம் தொடங்கப்பட்டபோது, நிர்வாக வசதிகளுக்காக 133 பொதுக்குழு உறுப்பினர்களை நியமனம் செய்தார் பேரறிஞர் அண்ணா. அந்தப் பொதுக்குழுவில் இருந்து, நான்கு முக்கிய துணைக்குழுக்கள் ஏற்படுத்தப்பட்டன. அவை அமைப்புக் குழு, பிரச்சாரக் குழு, அமைப்புத் திட்டக் குழு, நிதிக் குழுவாகும். கலைஞர் பிரச்சாரக் குழுவின் உறுப்பினராக நியமிக்கப்பட்டிருந்தார்.

## சீரணி → இளைஞர் அணி 28

**ந.வினோத்குமார்**

**தி.மு.கழகத்தால் இளைஞர்களும், இளைஞர்களால் கழகமும், இந்த இருவரால் தமிழ்ச் சமூகமும் கண்ட மேம்பாடு குறித்துப் பேசும் தொடர் ‘சீரணி முதல் இளைஞர் அணி வரை’...**

# சீரணியில் தளபதி வருகை!

ஓவியம் : ரவி பேலட்



*சீரணி வேகமாகவும் சீராகவும் வளர்ந்து கொண்டிருந்தபோது, மேலும் அதற்கு உத்வேகத்தை அளிக்கும் வகையில், இன்றைய நமது கழகத் தலைவர் **‘திராவிட மாடல்’** நாயகன் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் வருகை அமைந்தது. இது நடந்தது, 1971-ஆம் ஆண்டு ஏப்ரல் 25-ஆம் தேதி..!*

*ஒரு முறை அன்றைய முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், சென்னை எலியட்ஸ் கடற்கரைப் பகுதியைப் பார்வையிட்டபோது, அங்கிருந்த புதர்களை அகற்ற வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். உடனே, 640 சீரணியினர் ஐந்து நாட்களில் இரவு பகலாக உழைத்து, மூன்று பர்லாங் நெடுகிலும் மண்டிக் கிடந்த புதர்களை அகற்றினர். இது குறித்து, மேற்கண்ட தேதியில் வெளியான ‘நம்நாடு’ இதழ் இவ்வாறு தெரிவிக்கிறது:*

*“ஆக்கப் பணிகளைப் புரிந்த சீரணித் தொண்டர்கள், இன்று சென்னைக் கடற்கரையை அழகுபடுத்தும் வேலையில் ஈடுபட்டனர். சென்னை, எலியட்ஸ் கடற்கரையை அழகுபடுத்தும் வேலையை, சீரணித் தொண்டர்கள் ஞாயிறு காலை 8 மணிக்குத் தொடங்கினர்.*

*சென்னை மாவட்ட சீரணித் தலைவர் நீல.நாராயணன் எம்.எல்.சி, சீரணி தனி அதிகாரி க.பரமசாமி ஆகியோர் முன்னிலையில், முதல்வர் கலைஞரின் புதல்வர் மு.க.ஸ்டாலின் பணியைத் துவக்கி வைத்தார். மயிலைப் பகுதி சீரணித் தலைவர் கே.ரங்கநாதன், மயிலை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் சாரங்கன் மற்றும் 160 சீரணித் தொண்டர்கள் விழாவில் கலந்து கொண்டனர். சீரணியைச் சேர்ந்த பெண் தொண்டர்கள் உற்சாகத்துடன் பங்கேற்றது குறிப்பிடத்தக்கது.*

**சீரணித் தொண்டர்கள் கடும் உழைப்பை மேற்கொண்டு இருப்பதற்கு பாராட்டுத் தெரிவித்தார்கள்”.**

*முட்புதர்கள் வளர்ந்து கிடந்த எலியட்ஸ் கடற்கரைப் பகுதியை, கடுமையான உழைப்பினால் சீரணித் தொண்டர்கள் கண்கவரும் விளையாட்டுத் திடலாக மாற்றினர். எலியட்ஸ் கடற்கரையில் குளிக்க வந்த வெளிநாட்டினர் சிலர், சீரணித் தொண்டர்களின் பணியைப் பார்த்து, சீரணித் தொண்டர்கள் கடும் உழைப்பை மேற்கொண்டு இருப்பதற்கு பாராட்டுத் தெரிவித்தார்கள்”.*

*அதே நாளில், தளபதி அவர்கள் ஐஸ் அவுஸ், கபூர் சாகிப் தெருவிலும் துப்புரவுப் பணியைத் தொடங்கி வைத்திருக்கிறார்.*

*இந்தப் பணியை மாநகராட்சி மேற்கொண்டு செய்திருந்தால், ரூ.10 ஆயிரம் செலவாகியிருக்கும் என்றும், சீரணியினரால் மேற்கொள்ளப்பட்டதால் புல்டோசருக்கு ரூ.600 மற்றும் அதற்கான டீசல் செலவு ரூ.2,000 என மொத்தம் ரூ.2,600-இல் பணிகள் முடிந்தது எனவும் ‘நம்நாடு’ தெரிவிக்கிறது.*

**...வெற்றிநடை போடும்.**

### சீரணியினருக்குச் சான்றிதழ்!

1970-ஆம் ஆண்டு முதல் சீரணியினருக்கு ஒருவார காலப் பயிற்சி முகாம் தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் நடைபெற்று வந்தது. அதில் கலந்து கொள்பவர்களுக்குப் பயிற்சியின் முடிவில், மாவட்ட ஆட்சியர் கையெழுத்திட்ட சான்றிதழும் வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு சான்றிதழ் பெற்றவர்களில், ஒருவர் கோவையைச் சேர்ந்த மறைந்த மிசா சு.வேலுசாமி அவர்கள். அவரது புகைப்படத்தையும், அவர் பெற்ற சான்றிதழின் படத்தையும் நமக்கு அனுப்பி உதவியிருக்கிறார் அவரது புதல்வர் வே.சூரியன்தம்பி. தந்தை வழியில் அவர் இப்போது கழக இளைஞர் அணி மாவட்டத் துணை அமைப்பாளராகச் செயலாற்றி வருகிறார்.

இந்தப் பயிற்சி முகாம்களின் நிறைவுநாளில் சீரணியினர் வெள்ளைச் சட்டையும், பச்சை நிற அரைக்கால் சட்டையும் அணிந்து செய்கிற அணிவகுப்பு மரியாதையை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஏற்றுக்கொண்டதாக **‘நம்நாடு’** இதழில் வெளியான செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.





## பொய்ப்பெட்டி 28

**கோவி.லெனின்**

**“கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் – விடையும்...”**

***தமிழ்நாட்டில் சட்டம்-ஒழுங்கு கெட்டுவிட்டது என்றும், ஒரே நாளில் 6 கொலைகள் நடந்துள்ளன என்றும் அ.தி.மு.க.வும் பா.ஜ.க.வும் குற்றம்சாட்டி, தி.மு.க. அரசு பதவி விலக வேண்டும், என்கிறார்களே?***

*மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தி.மு.க. அரசு, மக்களின் ஆதரவுடன் ஒவ்வொரு தேர்தல் களத்திலும் மகத்தான வெற்றிபெற்று வருகிறது. ஆட்சி மீது எந்தக் குறையும் சொல்ல முடியவில்லை, சொன்னாலும் மக்களிடம் எடுபடுவதில்லை என்பதால், ஒரே நாளில் 6 கொலை என்று தங்களுக்கு ஜால்ரா அடிக்கும் ஊடகம் மூலம் தலைப்புச் செய்தியாக்கி, தி.மு.க அரசுக்கு எதிரான வன்மப் பிரச்சாரத்தைச் செய்ததுடன், எடப்பாடி பழனிசாமியும், பா.ஜ.க.வினரும் தங்கள் கள்ளக் கூட்டணியின் அடிப்படையில் குற்றம்சாட்டினர்.*

*ஒவ்வொரு மாநிலத்திலும் நாள்தோறும் குற்றங்கள் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. அதில் தமிழ்நாட்டில் குற்றச்செயல்களின் எண்ணிக்கை குறைவு. இந்த 6 கொலை என்பது தனிப்பட்ட விரோதம், கொடுக்கல்-வாங்கல் போன்ற பிரச்சினைகளால் ஏற்பட்டது. அனைத்துக் குற்றங்களிலும் சம்பந்தப்பட்டவர்களைப் போலீசார் கைது செய்திருப்பதுடன், உரிய நடவடிக்கையும் மேற்கொண்டுள்ளனர். எடப்பாடி பழனிசாமி ஆட்சி, போலீசாரை வைத்தே, தூத்துக்குடியில் 13 பேரைச் சுட்டுக்கொன்றது. சாத்தான்குளத்தில் தந்தையையும் மகனையும் போலீஸ் நிலையத்தில் கடுமையாகத் தாக்கி உயிரிழக்கச் செய்தது எனப் பட்டியல் நீளும்.*

**பா.ஜ.க ஆளும் மாநிலங்களில் பாலியல் குற்றங்களில் ஈடுபட்ட பா.ஜ.கவினரே தலைப்புச் செய்திகளில் இடம் பிடித்தனர். அதற்காக எந்த மாநிலத்திலும் பா.ஜ.க. முதல்வர் எவரும் பதவி விலகவில்லை.**

# கதறும் கறைகளின் கூட்டணி!





*பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் நடைபெறும் குற்றங்கள் உலக அளவில் அதிர்ச்சிகளை ஏற்படுத்துகின்றன. உத்தரப் பிரதேச பா.ஜ.க அரசின் புல்டோசர் ராஜ்ஜியத்தை உச்சநீதிமன்றமே கடுமையாகக் கண்டித்திருக்கிறது. அண்மையில், கிருஷ்ண ஜெயந்தியின்போது, உற்சவம் பார்க்கச் சென்ற தலித் சமுதாயத்தைச் சேர்ந்த இரண்டு இளம்பெண்கள் சந்தேகத்திற்குரிய வகையில், ஒரு மரத்தில் தூக்கில் தொங்கிய விவகாரம் உத்தரப் பிரதேச அரசின் சட்டம்-ஒழுங்கு லட்சணத்தை ,இந்தியாவுக்கே அம்பலப்படுத்தியது.*

*மத்தியப் பிரதேசம், ஹரியானா என பா.ஜ.க. ஆளும் மாநிலங்கள் அனைத்திலும் கொலை, பாலியல் கொடுமை, வழிப்பறி இவை தொடர்ந்தபடியே இருக்கின்றன. தமிழ்நாட்டில் ஃபார்முலா-4 பந்தயமும், தொழில் முதலீடுகளும், தலைப்புச் செய்திகளாக சர்வதேச கவனத்தை ஈர்த்தபோது, பா.ஜ.க ஆளும் மாநிலங்களில் பாலியல் குற்றங்களில் ஈடுபட்ட பா.ஜ.கவினரே தலைப்புச் செய்திகளில் இடம் பிடித்தனர். அதற்காக எந்த மாநிலத்திலும் பா.ஜ.க. முதல்வர் எவரும் பதவி விலகவில்லை.*


*மணிப்பூரில் மறுபடியும் கலவரத் தீ பற்றி எரிகிறது. நாட்டை ஆளுகின்ற பா.ஜ.க. பிரதமர் எட்டிக்கூடப் பார்க்கவில்லை. முதலில், உங்கள் முகத்தில் உள்ள கறையைத் துடைத்தெறிய வழிபாருங்கள்.*

**...வினா தொடரும்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம்

599

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.